செய்தி வெளியீடு நாள்: 18.01.2026

வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் நேரில் ஆய்வு.

வட சென்னை வளர்ச்சி திட்டம் என்பது காலம் காலமாக, "கார் உள்ளளவும் கடல் நீர் உள்ளளவும்" மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பெயரும் புகழும் சொல்லும் வகையில் செயல்படுத்தப்படும்.

மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தகவல்.

*****

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி இன்று (18.01.2026) துறைமுகம் சட்டமன்றத் தொகுதி, வால்டாக்ஸ் சாலை, தண்ணீர் தொட்டி தெரு மற்றும் அண்ணா பிள்ளை தெருவில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் இரத்த சுத்திகரிப்பு மையம், 700 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள், சமுதாய நலக்கூடம், மாநகராட்சி அச்சகம் மற்றும் விளையாட்டுத் திடல் என "ஒருங்கிணைந்த வளாகம் " கட்டுமானப் பணிகளை துரிதபடுத்தும் வகையில் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்து, மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர ஒப்பந்ததாரர்கள் மற்றும் பொறியாளர்களை அறிவுறுத்தி, அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, இராயபுரம் சட்டமன்ற தொகுதியில், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் மேம்படுத்தப்பட்டு வரும் **மூலக்கொத்தளம் விளையாட்டு அரங்கத்தின்** பணிகளையும் **புதிய சமுதாய நலக்கூடத்தின்** கட்டுமான பணிகளையும் துரிதபடுத்தும் வகையில் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட ஒப்பந்ததாரர் மற்றும் பொறியாளர்களை அறிவுறுத்தினார்.

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :

தேர்தல் அறிவிப்புக்கு முன்பாக 40 திட்டங்களை மக்களுடைய பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்று **மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்** உத்தரவிட்டதின் பேரில், காலை முதல் இரவு வரை இந்தப் பணிகளிலேயே முழுமையாக ஈடுபட்டு செயல்பட்டு வருகிறோம். இந்த அணுகுமுறையில், பணிகளுக்குத் தேவையான மின்சாரம், குடிநீர், கழிவுநீர் துறை உள்ளிட்ட அனைத்து துறைகளுடனும் கலந்தாலோசனை நடத்தி வருகின்றோம். அந்த வகையில், இன்று காலை ஒரே வளாகத்திற்குள் ஆறு ஏக்கர் நிலப்பரப்பில் உருவாக உள்ள விளையாட்டு திடல், அரசு அச்சகத்திற்கான நவீனமயமாக்கப்பட்ட கட்டிடம், திருமண மண்டபம், டயாலிசிஸ் (இரத்த சுத்திகரிப்பு) நிலையம், மேலும் 700 குடியிருப்புகள் கொண்ட வாழ்வாதாரத் திட்டம் ஆகியவற்றை ஆய்வு செய்தோம். இவை தற்போது சாலையோரங்களில் வசித்து வரும் மக்களுக்கு நிரந்தரமான வாழ்வாதாரத்தை ஏற்படுத்தித் தரும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன.

அதோடு, இந்த திட்டத்தில் கட்டப்பட்டு வரும் விளையாட்டு காம்ப்ளக்ஸ் மற்றும் விளையாட்டு திடலையும் இன்று பார்வையிட்டுள்ளோம். இதனைத் தொடர்ந்து, அருகிலேயே கட்டப்பட்டுள்ள கல்யாண மண்டபத்தையும் பார்வையிட இருக்கின்றோம். **மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின்** பொற்கரங்களால், ஸ்டான்லி அரசு மருத்துவமனை அருகில் கட்டி முடிக்கப்பட்ட 770 வீடுகள் பயனாளிகளுக்கு ஒப்படைக்கப்பட இருக்கின்றன. அந்த 770 பயனாளிகளும் சாலையோரங்களில் வசித்து வந்த மக்களாக இருக்க வேண்டும் என்றும், எந்தவிதமான தலையீடும் இன்றி, முழுக்க முழுக்க உண்மையான பயனாளிகள் தேர்வு

செய்யப்பட வேண்டும் என்றும் **மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்** உத்தரவிட்டிருக்கின்றார். அந்த வகையில், **மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்** பொங்கல் திருநாளன்று சாலையோரங்களில் வசித்து வந்த குடிசைப் பகுதி மக்களை நேரடியாக சந்தித்து, அவர்களுடைய குறைகளை கேட்டு அறிந்து, அவர்களுக்கு இந்த குடியிருப்புகள் வழங்கப்படும் என உறுதியளித்துள்ளார். அதே நாளில், மனிதாபிமானத்தோடும் மனிதநேயத்தோடும் மூத்தோர்கள் தங்கி இருக்கும் முதியோர் இல்லத்திற்கு நேரடியாக சென்று ஆய்வு செய்து, அவர்களோடு பொங்கலைக் கொண்டாடியிருக்கிறார். அவர்களுடைய தேவைகளை அறிந்து, சென்னையில் செயல்பட்டு வரும் 57 முதியோர் குடியிருப்புகளையும் மேம்படுத்தவும், அவர்களுக்கு தினசரி வழங்கப்படும் உணவுக்கான தொகையை உயர்த்தவும் **மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்** உத்தரவிட்டிருக்கின்றார்.

இந்த வகையில், வட சென்னை வளர்ச்சி திட்டம் என்பது காலம் காலமாக, ‘‘கார் உள்ளளவும் கடல் நீர் உள்ளளவும்’’ **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** பெயரும் புகழும் சொல்லும் வகையில் செயல்படுத்தப்படும். இதற்காக எங்களுடைய துறையின் செயலாளர் திருமதி.காகர்லா உஷா அவர்களும், துறையின் உறுப்பினர் செயலர் திரு.கோ.பிரகாஷ் அவர்களும், முதன்மை செயல் அலுவலர் திரு.அ.சிவஞானம் அவர்களும், மாநகராட்சி ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன் அவர்களும், மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக் அவர்களும், மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் திரு.கட்டா ரவி தேஜா அவர்களும் ஒருங்கிணைந்து, இரவு பகல் பாராமல் தொடர்ந்து கண்காணித்து இந்தப் பணிகளை முன்னெடுத்து வருகின்றோம்.

இவ்வாறு மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின் போது, சிஎம்டிஏ உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., முதன்மை செயல் அலுவலர் திரு.அ.சிவஞானம், இ.ஆ.ப., மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., மாநகராட்சி நகர் நல அலுவலர் டாக்டர் ஜெகதீசன், தலைமைப் பொறியாளர்கள் திரு.ராதாகிருஷ்ணன் (சென்னை குடிநீர் வாரியம்), திரு.தமிழ்ச்செல்வன் (மின்சார வாரியம்), சிஎம்டிஏ கண்காணிப்புப் பொறியாளர்கள் திரு.பாலமுருகன், திரு.ராஜன்பாபு மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

Verified @ RealEstate TT